செ.வெ.எண்.17/2018 நாள்:11.06.2018

## பத்திரிக்கை செய்தி

சிவகங்கை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் 3 கல்லூரி மாணவர் விடுதிகளும், 4 கல்லூரி மாணவிகள் விடுதிகளும், 27 பள்ளி மாணவர் விடுதிகளும், 12 பள்ளி மாணவிகள் விடுதிகளும் செயல்பட்டு வருகிறது. 4-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரையிலும் பயிலும் மாணவ மாணவிகள் மற்றும் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் மாணவர்கள் இந்த விடுதிகளில் சேர்ந்து பயனடையலாம்.

இதற்கு மாணவ மாணவிகளின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும். விடுதியிலிருந்து மாணவர் குடியிருப்பு 5 கி.மீக்கு மேல் இருக்க வேண்டும். மாணவிகளுக்கு இது பொருந்தாது.

மாணவ மாணவிகளுக்கு விடுதிகளில் தரமான உணவு காலை, மாலை மற்றும் இரவு ஆகிய 3 வேளைகளிலும் வழங்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்திலுள்ள மாணவ மாணவிகள் ஆதிதிராவிடர் நல விடுதிகளில் சேர்ந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். 2018-2019-ம் ஆண்டிற்கு விடுதியில் சேர்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் Smart Sivaganga-ல் உள்ளன. விண்ணப்பங்களை பூர்த்தி செய்து Smart Sivaganga-ன் மூலம் சமர்ப்பிக்கவும் பள்ளி விடுதிகளுக்கு 25.06.2018-ந் தேதிக்குள்ளும், கல்லூரி விடுதிகளுக்கு 04.07.2018-ம் தேதிக்குள்ளும் ஒப்படைக்குமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
சிவகங்கை.